நினைவில் நிறுத்தப்படுபவர்களாக...

# தோழர் மகா உத்தமன்

29.10.2006

**வைத்தி**

ஈழத் தமிழர் விடுதலைச் சிந்தனை வானில் ஒளிர்ந்து கொண்டிருந்த, 'உத்தா' எனத்
தோழர்களால் அழைக்கப்பட்ட ஒரு நட்சத்திரம் இன்று மறைந்து விட்டது.
தனது சிந்தனை முழுவதும் விடுதலை வேட்கையை வளர்த்துக் கொண்டவர்.
விடுதலைக்காகப் போராட வேண்டியதன் அவசியத்தை
எப்போதும் வலியுறுத்திக் கொண்டவர். தன் வாழ்வையும் அதற்காகவே
அர்ப்பணித்தவர்
**தோழர் மகா உத்தமன்!**
ஈழத் தமிழ்ச் சமூகத்தில் சுதந்திர விடுதலையைச் சாதிக்க வேண்டும் என்பதற்காய்
தனது வாழ்நாள் முழுவதும் அதற்கான சாத்தியப்பாடுகளைத் தேடிய
ஒரு போராளியாக இருந்தார்
**தோழர் மகா உத்தமன்!**

ஈழத் தமிழர் போராட்ட வரலாற்றில், முதல் விடி வெள்ளியாய் உரும்பிராய் மண்ணில் தோன்றிய சிவகுமாரனின் பால்ய தோழன் மகா உத்தமன், தன் வாழ்நாளின் பெரும் பகுதியை லண்டனில் கழித்திருந்தாலும் ஈழ விடுதலை இயக்கங்களின்,தேர்ப் பாகன்களில் ஒருவராய் முன்னின்று உழைத்தார். விடுதலை இயக்கங்களுக்குள் அராஜகம் கோலோச்சத் தொடங்கியபோது மிகவும் வேதனை கொண்டார். விடுதலைப் பயணத்தில் மாற்று சக்திகளின் தலையீட்டை வலியுறுத்தி தொண்ணூறுகளில் 'தமிழீழக் கட்சி' தோன்றுவதற்கும் முன்னின்று உழைத்தார். லண்டனை மையப்படுத்தி வெளிவந்த 'உயிர்ப்பு' கோட்பாட்டுப் பத்திரிகையில் இவரது பங்களிப்பு காத்திரமாகவே இருந்தது.

உலகின் இயங்கு நிலையிலுள்ள பல்வேறு அரசியல்களின் முரண்களின் முடிச்சுக்களை அவிழ்க்கும் தந்திரோபாயங்களை மார்க்சிய மூலவர்களில் இருந்து தொடங்கி நவீன சிந்தனையாளர்களிடமும் தேடிக் கற்றுக் கொள்ளத் தயங்காத புரட்சிகர மாணவனாகவும் இருந்தார்.



மகா உத்தமனை ஒரு சிறிய விடுதலைச் சிந்தனை வட்டத்துக்குள் சுட்டிவிட முடியாது. அவரோடு உரையாடி வாழ்ந்து களித்த தோழர்கள் அறிவர் அவரின் விடுதலைச் சிந்தனையின் பிரகாசம்!

*வாழ்தல் மகத்தானது!*
*சராசரி*
*மனித ஆசாபாசங்களுடன்*
*அலைக் கழிந்து அல்லலுற்று*
*சாவதை ஒதுக்கி*
*தனது சமூகத்துக்காய் தேசத்துக்காய்*
*தேசத்தை உறுதி செய்யும்*
*பிராந்திய ஒருமைப்பாட்டுக்காய்*
*இந்தப் பிராந்தியங்களின் ஒருமைப்பாட்டை*
*சிதைத்து பிய்த்துத் தின்னத் துடிக்கும்*
*மேலாதிக்க வல்லரசுகளுக்கு*
*எதிராகப் போராடும்*
*புரட்சியாளனாக*
*வாழ்தல் மகத்தானது!*